**பகுதி -ஆ** (4 × 5 = 20)

எவையேனும் **நான்கனு**க்குச் சிறு குறிப்புத் தருக.
**அனைத்து** வினாக்களுக்கும் **சம** மதிப்பெண்கள்.

9. (அ) நிலவுப் பயன் கொள்ளும் நெடுவென் முற்றம் – விளக்குக.

(ஆ) மாசு அறக் கழீஇய யானை போலப் பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல் – இவ்வுவமையால் பெறும் கருத்தினைப் புலப்படுத்துக.

(இ) `வாழி ஆதன், வாழி அவினி! நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க! இவ் வாழ்த்து எதற்காக? விளக்கம் தருக.

(ஈ) என்புதோல் போர்த்த உடம்பு – விளக்குக.

(உ) நீர் மிகின் சிறையும் இல்லை; தீமிகின் மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை; இதற்கு ஒப்பானவன் யார்? விளக்குக.

(ஊ) வையை மணலையும் பரங்குன்றத்தையும் வைத்து தலைவன் தலைவி இருவரம் சூள் உரைத்த நிகழ்வை விளக்குக.

(எ) ஊன் துவை அடிசில் – விளக்குக.

(ஏ) `உண்ணா மையின் உயங்கிய மருங்கின் ஆடாப் படிவத்து ஆன்றோர் போல' – இவ்வுவமை எதற்காகச் சொல்லப்பட்டுள்ளது? அகநானூற்றுப் பாடற்கருத்தைத் தருக.

Register Number :

Name of the Candidate :

**5 7 3 8**

# B.Lit. DEGREE EXAMINATION, 2012

**(DOUBLE DEGREE)**

(PAPER - IX)

## 790. பண்டைய இலக்கியம்

*( Applicable to candidates joined in 2008-09 and after )*

May ] [ Time : 3 Hours

Maximum : 100 Marks

**பகுதி - அ** (8 × 10 = 80)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.
**அனைத்து** வினாக்களுக்கும் சம மதிப்பெண்கள்.

1. (அ) கூதிர் கால வருணனை நக்கீரரின் தமிழ்ப்புலமைக்கு எவ்வாறு சிறப்புச் செய்கின்றது? விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவிக்கு நெடியதாகவும் தலைவனுக்கு நல்லனவாகவும் வாடைக்காற்று விளங்குகின்ற பான்மையினை நக்கீரர் எங்ஙனம் உணர்த்தியுள்ளார்? புலப்படுத்துக.

**Turn Over**

2. (அ) வாயில் நேர்தல், வரைவு கடாவுதல், அறத்தொடு நிற்றல் என்னும் அகத்துறை ஒழுகலாறுகள் குறுந்தொகைத் தோழியால் எங்ஙனம் நிகழ்த்தப்படுகின்றன? விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஐங்குறு நூறு வேட்கைப்பத்து பாடல்கள் உணர்த்தும் உள்ளுறை உவமச் சிறப்பினை எடுத்துரைக்க.

3. (அ) மக்கட் பேற்றின் மான்பினை வலியுறுத்தும் குறட் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) வள்ளுவரின் இறை வாழ்த்து எங்ஙனம் முன்மாதிரியாகத் திகழ்கின்றது என்பதன் காரணங்களைக் கூறுக.

4. (அ) அரசவாகைத் துறைப் பாடல்கள் மூலம் உணரலாகும் தமிழ் வேந்தர்களின் இயல்புகளைத் தொகுக்க.

(அல்லது)

(ஆ) புறநானூற்றுப் பாடாண்திணைப் பாடல்களால் புலனாகும் பேரரசர்களின் பல்வகைச் சிறப்புக்களைப் பட்டியலிடுக.

5. (அ) களங்காய்க் கண்ணீ நார்முடிச் சேரமன்னனின் கொடைச்சிறப்பினைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடல் வழி எடுத்தியம்புக.

(அல்லது)



(ஆ) சேரமன்னனின் வீரச்சிறப்பும் படைத்திற மாட்சியும் நான்காம் பத்துப் பாடல்களில் உட்பொதிந்துள்ள பான்மையைப் புலப்படுத்துக.

6. (அ) செவ்வேள் குறித்த தொன்மச் செய்திகளைப் பரிபாடல் எடுத்துரைக்கும் தன்மையை ஆராய்க.

(அல்லது)

(ஆ) செவ்வேளின் குன்றமும் அவனது புகழும் கேசவனாரால் போற்றிப் பாராட்டப்படும் திறம் குறித்து எழுதுக.

7. (அ) தோழி இயற்பட மொழிய தலைவி இயற்பழித்து மொழிந்த குறிஞ்சிக் கலிப் பாடற் கருத்தின் நயம் உரைக்க.

(அல்லது)

(ஆ) இரவுக்குறி விலக்கி பகற்குறி நேர்ந்த தோழியின் சொல் திறத்தை எடுத்து விளக்குக.

8. (அ) வினை முற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்கு உரைத்த அகநானூற்றுப் பாடற் கருத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியின் பிரிவுத்துயரை அகநானூற்றுப் பாலைத் திணைப்பாடல்கள எவ்விதம் இயம்புகின்றன? மொழிக.

Turn Over